Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 தை 20 திங்கட்கிழமை (02-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 57

# கிளிநொச்சி-பரந்தன் பகுதியில் புலிகள் நேற்று பெரும் தாக்கு!

## முறியடித்துவிட்டதாக படை தரப்பு அறிவிப்பு

வவுனியா, பெப்ரவரி 2

படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான கிளிநொச்சி -- பரந்தனில் அமைந்துள்ள படை முகாம்கள்மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். அதிகாலை 1.50 மணியளவில் இத்தாக்குதல் ஆரம்பமானது.

படையினர் விமானப்படை மற்றும் டாங்கிகள், மோட்டார்களின் உதவியுடன் பதில் தாக்குதலை நடத்தினர்.

புலிகளின் தாக்குதல் முறியடிக்கப்பட்டுவிட்டதாக பாதுகாப்பு அமைச்சின் தலை

(10ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் தொடர்வதாக புலிகள் தெரிவிப்பு

வவுனியா, பெப். 2

கிளிநொச்சி பரந்தனில் இராணுவ முகாம்கள் மீதான தாக்குதல் தொடர்ந்து நடைபெறுவதாக புலிகளின் குரல் நேற்றுத் தெரிவித்தது.

புலிகளின் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் —

படையினர் மீது கடும் ஷெல் தாக்குதலை நடத்தி வருவதாகவும் —

இதில் படைத்தரப்பு பலத்த இழப்பைச் சந்தித்துள்ளது என்றும் —

தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருவதால் மேலதிக விவரங்கள் இது வரை கிடைக்கவில்லை என்றும் புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது. [இ-3]

## 350 புலிகள் மரணம் என்கிறது அரசு

கொழும்பு, பெப். 2

நேற்றைய தினம் நடந்த சண்டைகளில் 350 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக தரையில் உள்ள படையினரின் தகவல்களை ஆதாரம் காட்டி அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவ முகாம்களைப் புலிகள் தாக்கியபோது கடும் சண்டை மூண்டதாகவும்—

சண்டையில் இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் எடுத்துச் செல்ல களத்தில் நின்ற புலிகள் தமது சகாக்களிடம் அவசர வாகன உதவி மற்றும் மருத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு ஆட்லறி நிலைகள் மீதும் புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 2

நேற்றைய சண்டைகளின் போது ஆனையிறவில் உள்ள ஆட்லறி நிலைகளைத் தாக்குவதற்கும் புலிகளின் தற்கொலைப் படையினர் முயன்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் பதில் தாக்குதல் நடத்தி புலிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியதாக பலாலி இராணுவ தலைமையகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் மி-56 ரக 16

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மேற்குப் பகுதியில் கிபிர் விமானங்கள் தாக்குதல்

வவுனியா, பெப். 2

கிளிநொச்சி மேற்குப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது கிபிர் விமானங்கள் நேற்று தாக்குதல் நடத்தியதாகவும், அத்தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாகவும் "புலிகளின் குரல்" நேற்றுத் தெரிவித்தது.

இறந்தவர்கள் விவரம் கிடைக்கவில்லை என்றும் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு புலிகள் அமைப்பினருடன் தொடர்பு

### சடலங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி முகாம்கள்மீது நேற்று அதிகாலை நடத்திய தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் ஒரு தொகுதியினரின் சடலங்களைக் கையளிக்க படையினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது தம்மால் கைப்பற்றப்பட்டுள்ள சடலங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யுமாறு படையினரால் தம்மிடம் கோரப்பட்டுள்ளதாகவும் —

இது தொடர்பாகத் தாம் விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் — செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி ஆன் நேற்றிரவு உதயனுக்கு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பதிலைப் பொறுத்தே சடலங்கள் கையளிப்பு இடம் பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## களப்பலியானோரில் 26 பேர் பற்றிய விவரம் அறிவிப்பு

### 8 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்

வவுனியா, பெப். 2

கிளிநொச்சி - பரந்தன் படைமுகாம்கள் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் களப்பலியானவர்களில் 26 பேரின் விவரங்களை "புலிகளின் குரல்" நேற்றிரவு அறிவித்தது.

அவர்களின் விவரம் வருமாறு:

★ சுகந்தி (கிருஷ்ணராசா வில்சன் — மட்டக்களப்பு)

★ யோகம் (தங்கராசா காளிப்பிள்ளை — திருமலை)

★ கதிரவேல் (நல்லதம்பி சிவகுமார் — கிளிநொச்சி)

★ அன்பனா (கந்தசாமி நளாயினி — உருத்திரபுரம்)

★ ரஜிந்தபாலன் (சுப்பிரமணியம் குழந்தைவேல் — மட்டக்களப்பு)

★ மதுரவனவன் (தம்பிராசா ராஜேந்திரன் — மட்டக்களப்பு)

★ செண்பகன் (தியாகராசா ரஞ்சன் — மட்டக்களப்பு)

★ அசுமித்திரன் (கிருஷ்ண குமார் தர்மலிங்கம் — மட்டக்களப்பு)

★ அன்புதாசன் கந்தசாமி உதயகுமார் — யாழ்ப்பாணம்)

★ சுசில் அல்லது சந்திரன் (சோமசுந்தரம் சுதர்சன் — மட்டக்களப்பு)

★ வெற்றிவேல் (மாணிக்கம் அகிலன் — யாழ்ப்பா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரி உட்பட 34 படையினர் உயிரிழந்ததாக அரசு அறிவிப்பு

பரந்தன்-கிளிநொச்சி பகுதியில் நேற்று இடம் பெற்ற சண்டைகளில் ஒரு லெப்டினன்ட் உட்பட 34 படையினர் கொல்லப்பட்டதாகவும்-இரு அதிகாரிகள் உட்பட 64 படையினர் காயமடைந்ததாகவும் பலாலி ராணுவத்தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் பலாலி ஆஸ்பத்திரிக்கும் கொழும்பு ராணுவ ஆஸ்பத்திரிக்கும் எடுத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களுக்குப் புறம்பாக மேலும் 253 படையினர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். இவர்களில் 6 பேர் அதிகாரிகள். இவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட்டு மீண்டும் யுத்த முனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### கடும் சண்டையின் பின்

## முன்னணி அரங்கு ஒன்றினூடாக புலிகள் முகாமுக்குள் ஊடுருவினர்

யாழ்ப்பாணம், பெப். 2

நேற்று கிளிநொச்சி— பரந்தன் பகுதிகளில் தாக்குதல் நடத்திய புலிகள் முன்னணிக் காவல் அரண் ஒன்றை உடைத்துக் கொண்டு முகாம் பகுதிக்குள் நுழைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் ஒரு முன்னணிப் பகுதியூடாக ஊடுருவுவதற்கு புலிகளின் தற்கொலை படையாளிகள் மேற்கொண்ட முயற்சி வெற்றி அளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று பிற்பகல் வரை சண்டை நடைபெற்றதாகவும்—

புலிகளினால் அங்கு விட்டுச் செல்லப்பட்ட சிறு குழு ஒன்றே படையினருடன் சண்டையில் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

## பட்டதாரி உதவி ஆசிரியர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 2

வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வடக்கு — கிழக்கு மாகாணப் பொதுச் சேவைக்கு விஞ்ஞான, கலை, வர்த்தக பட்டதாரி உதவி ஆசிரியர்களைச் சேர்க்கும் வகையில் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 15 ஆம் திகதியாகும். (இ-7)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகசபை ஆதிலட்சுமி

(மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், 653, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை ஆதிலட்சுமி 01-02-98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தவனம்-தங்கச்சிப்பிள்ளையின் மகளும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, சின்னையா, இலங்கைநாதர், இன்னம்மா, துரைச்சாமி ஆகியோரின் சகோதரியும், மகேந்திரராசா, நற்குணராசா (குணம்) [சிற்றுண்டிச்சாலை, யாழ். அஞ்சலகம்] சிவகாந்தலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற செல்வநாயகி ஆகியோரின் மாமியாரும், பிறேமலதா (யாழ். க. வை. அ. பணிமனை), திருமதி லோகநாதன் - பாமலதா (குடும்பநல உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), கருணராஜ், தயாநந்த், ரமணன், ராகுலன், சேமலதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மோகனனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-02-98) காலை 10.00 மணிக்கு நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணம் (மகன்)

653, நாவலர் வீதி,
நல்லூர்.

(53043)

### திருமதி சுப்பிரமணியம் பூபதி

(வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)

திருமதி சுப்பிரமணியம் பூபதி 29-01-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், இராசு (புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலை), இலங்கைநாதன் (சுவிஸ்), இரவீந்திரன் (சுவிஸ்), சந்திரவதனி (இத்தாலி), றோசமலர் (ஜேர்மனி), கலாராணி (கொழும்பு), அன்னலட்சுமி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகடாட்சம், யோகநாதன், காண்டீபன், அருந்தவராசா, மங்களேஸ்வரி, சாந்தி, செல்வமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிறிபிரதாப், பிரசாந், பிரதாயினி, அருச்சுனா, றம்மியா, ரகு, கிபிர், மிதுனா, தீபனா, வதனராஜ், கௌசிகா, துவாரகன், பகிரதன் ஈஸ்வரன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29-1-98 இல் விளாவெளி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பொ. சிவகடாட்சம்
(மருமகன்)

65, பிறவுன் றோட்,
யாழ்ப்பாணம்.

(53034)

### மயில்வாகனம் அருணாசலம்

மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தபால் அதிபர் திரு. ம. அருணாசலம் 31-1-98 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி மயில்வாகனம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. வே. சோமசுந்தரத்தின் (புகையிலை வர்த்தகர் மீசாலை) மருமகனும், சிவபாக்கியத்தின் (பாக்கியம்) அன்புக் கணவரும், ரஞ்சினி (ஆசிரியை, யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.) ரங்கன் (ஆசிரியர், பிட்டகந்த த. ம. வி., மாத்தளை), ரவீந்திரன் (ஆராய்ச்சி உத்தியோகத்தர், நாரம்மல), ரமணீதரன் (ஆசிரியர், சென். தோமஸ் கல்லூரி, பண்டாரவளை), ராகுலன் (சுவீஸ்), ராகினி (ஆசிரியை, யா/ அல்வாரை அ. த. க. பாடசாலை) ரஜனி (கலைப் பட்டதாரி யாழ். பல்கலைக்கழகம்) ராஜவதனி (2ஆம் வருட வர்த்தக பீடம், யாழ். பல்கலைக்கழகம், தபால் அதிபர், யாழ். தபால் இணைக்களம்), ரகுநந்தன் (பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி. சுப்பிரமணியம் (லிகிதர், நகரசபை, சாவகச்சேரி), ஓ. விஜயரத்தினம் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திருமதி இந்திரகுமாரி (ஆசிரியை, பாக்கிய வித்தியாலயம், மாத்தளை), திருமதி பாலநாகேஸ்வரி (ஆசிரியை, பாக்கிய வித்தியாலயம் மாத்தளை), திருமதி அன்பரசி (ஆசிரியை, பண்டாரவளை தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு. சோ. கணேசலிங்கத்தின் (இளைப்பாறிய அதிபர்) மைத்துனரும், பார்த்தீபன், பரந்தாமன், பகிரதன் அருளினி, கௌதமி, ரமணரூபன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01-02-98 அன்று மீசாலையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி சிவபாக்கியம் அருணாசலமும் பிள்ளைகளும்.

(சி/277 1)

## சுற்றிவளைப்பு

நேற்று அதிகாலை நவாலிப் பகுதியில் படையினரின் சுற்றிவளைப்புத் தேடுதல் இடம் பெற்றது. (இ)

## பெற்றோமக்ஸ் தீப்பிடித்து பெண் காயம்

பெற்றோமக்ஸ் தீப்பற்றியதால் பெண் ஒருவர் காயம் அடைந்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு கொட்டடிப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.


அடுத்த நாள் (ஞாயிறு) இவரது திருமணம் நடைபெற இருந்ததாகவும் —

இதற்கான ஆயத்தங்கள் நடத்துகொண்டிருந்த சமயம் ஒருவர் பெற்றோமக்ஸை கொளுத்திய போது அது தீப்பிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த பெண் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அன்று இரவே வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டார்.

பெற்றோமக்ஸை கொளுத்தியவர் காயம் எதுவும் இன்றித் தப்பிவிட்டார். (இ)

## வாழ்த்து



எங்கள் வைத்திய பணிமனையில் சேவையாற்றி, இன்று இல்லற பணிமனையில் திரு. ரஞ்சிதசர்மாவுடன் இணையும் அன்பின் சேவையின் சின்னமான செல்வி க. ரமாராணி B A. என்றும் ஏற்றமுடன் நல் வாழ்வு பெற நாம் வாழ்த்துகின்றோம்.

**மெடிக்சென்ரர் & நேசிங்ஹோம்**

இல. 36, பொற்பதி வீதி,
கொக்குவில்.

**இரவு பகல் சேவை**

நவீனமான, சகலவிதமான ஆய்வுகூட வசதிகளுடன் அலோபதி, சித்த, யூனானி, அக்குபங்சர், ஹோமியோபதி, யோகா தியான, இயற்கை வைத்தியம் முதலியவற்றின் வைத்திய நிபுணர்கள் சேவையாற்றும் ஒரே ஒரு சேவையகம். (53038)

எமது இன்றைய வெளியீடு!

முரளி — சூர்யா
**காதலே நிம்மதி**

ராஜசேகர் - மீனா
**மெய்க்காப்பாளன்**
(Body Guard)

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/2774)

**லிபேட்டி சினிமா**
அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்
இன்று மட்டும்
ரஜனிகாந்த், மீனா
நடித்த
**"முத்து"**

செவ்வாய், புதன் மட்டும்
விஜய் — சூர்யா
நடித்த
**"நேருக்கு நேர்"**
பழைய நேரம்
10-00, 2-30,
(52705)

## ராஜீவ் கொலை வழக்கு எதிரிகள் மேன்முறையீடு செய்ய முடிவு

சென்னை, பெப். 2

ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்ட 26 பேருக்கு எதிராக இந்திய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தவறானது எனவும் —

அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யவுள்ளதாகவும் எதிரிகள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் எஸ். துரைச்சாமி தெரிவித்துள்ளார்.

இரு சந்தேக நபர்களுக்கு எதிராக மட்டுமே கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது எனவும் —

ஏனைய சந்தேக நபர்களுக்கு எதிராகச் சதி முயற்சி குற்றச்சாட்டே சுமத்தப்பட்டுள்ளது எனவும் ஆனால் நீதிமன்றம் சந்தேக நபர்கள் அனைவருக்குமே மரண தண்டனை விதித்துள்ளது எனவும் சட்டத்தரணி துரைச்சாமி தெரிவித்தார். (இ-10)

### சுதந்திர தின பொன் விழா

## வெளிவிவகார அமைச்சர்கள் கொழும்பு வந்து சேர்ந்தனர்

கொழும்பு, பெப். 2

இலங்கையின் சுதந்திர தின பொன் விழாக் கொண்டாட்டங்களில் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர்கள் சார்க் நாடுகளின் தூதுவர்கள், அணிசேரா இயக்கத்தின் முன்னாள் தலைவர்கள் ஆகியோருக்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அழைப்பு விடுத்துள்ளார்.

அழைப்பை ஏற்று சாம்பிய வெளிவிவகார அமைச்சர் ரெலி எலி. வொலிபிற்றா, பூட்டான் வெளிவிவகார அமைச்சர் தேவா டெஸ்ரிங் ஆகியோர் நேற்றைய தினமே கொழும்பு வந்து சேர்ந்தனர்.

## மனமாரப் பாராட்டுகின்றோம்

**யா/ மானிப்பாய்**
**சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை**

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களான

செல்வன் R வசீகரன்
செல்வன் J. றஜீவன்
செல்வன் N. கௌதமன்
செல்வன் N. அகிலன்
செல்வன் K. கணேசானந்த்

ஆகியோரை வாழ்த்துவதோடு இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டிப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர்கள்.

(53045)

## NEW SCIENCE COLLEGE

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**PURE/APPLIED MATHS**

**A L 97, 98**

PURE: i) தாயங்கள்
ii) வகையீட்டுச் சமன்பாடுகள்

APPLIED: i) நிகழ்தகவு
ii) ஏவுகணை, செய்மதி இயக்கம்

★ மாதிரி வினா - விடை வகுப்பு ஆரம்பமாக உள்ளது.

ஆரம்பம்: **05-02-1998**
THU. 3.00 P.M.

ஆசிரியர்: **A. RAVI**

(53041)

## அறிவித்தல்

எனது கட்சிக்காரர் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம், தற்போது பூநகரி, சிவசம்பு வன்னியசேகரம், எனக்குக் கொடுத்த அறிவுறுத்தலின் பிரகாரம் 29-12-97 ஆம் திகதியன்று காலஞ்சென்ற புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் என்னும் இடத்தைச் சேர்ந்த சிவசம்பு நவரத்தினம் என்பவருக்குச் சொந்தமான சகல அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களைப் பரிபாலிப்பதற்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தத்துவ வழக்கு ஒன்று எனது கட்சிக்காரர் மேற்குறித்த சிவசம்பு வன்னியசேகரம் அவர்களால் தொடரப்படவுள்ளது என்றும், ஆகவே மேற்குறித்த சிவசம்பு நவரத்தினம் என்பவரோடு கொடுக்கல் — வாங்கல் செய்த சகலரையும் தகுந்த ஆதாரங்களுடன் என்னுடன் தொடர்பு கொள்ளும்படி இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது. மேற்குறித்த சிவசம்பு நவரத்தினம் மரண சாதனம் எதுவும் நிறைவேற்றாமலும், திருமணம் செய்யாமலும் மரணித்த காரணத்தால் அவரின் சகோதரன் ஆகிய எனது கட்சிக்காரர் மேற்குறித்த சிவசம்பு வன்னியசேகரம் என்பவர் குறித்த ஆதனங்களையும், சொத்துக்களையும் பரிபாலிக்க மேற்குறித்த தத்துவ வழக்கைத் தொடர வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என சம்பந்தப்பட்டவர்கள் சகலருக்கும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

க. கேசவன்
(சட்டத்தரணியும், நொத்தாரிசும்)

(53042)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதி தொண்டர் குழுவுடன் பெற்றோர் - உறவினர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப் 2

''யாழ்ப்பாணத்தில் கைதானோர், காணாமற் போனோர் குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் பதில் இன்னும் ஒன்றரை மாதத்திற்குள் எமக்குக் கிடைக்காது விட்டால் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில்குதிப்போம்.''

கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் தலைவர் எஸ். செல்வராசா தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கைதானோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கஉறுப்பினர்களை தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போது காணாமற் போன பிள்ளைகளின் பெற்றோர்கள், காணாமற் போனவர்களின் மனைவிமார்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

தமது பிள்ளைகள் கணவன்மாரது நிலை குறித்து பெற்றோரும், உறவினர்களும் கண்ணீர் மல்க எடுத்துக் கூறினர்.

காணாமற் போனோர், கைதானோர் பிரச்சினை குறித்து ஜனாதிபதியை நாம் நேரில் சந்தித்து முறையிட்டு ஒன்றரை மாதங்கள் கழிந்து விட்டன. ஆனால் ஜனாதிபதி எம்மிடம் கூறியது போன்று காணாமற் போனவர்களைக் கண்டு பிடிப்பதற்கு குழுக்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. அத்துடன் இது தொடர்பாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

இது போன்றே கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதி நிதிகள் எனப் பலரிடம் நேரடியாகவும், மகஜர்கள் மூலமும் எமது பிள்ளைகளைக் கண்டுபிடித்து தருமாறு வேண்டுகோள் விடுத்தோம். திருப்தியான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை — என்று பெற்றோர்கள் தென்னிலங்கைப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறினர்.

இச்சந்திப்பின் போது காணாமற் போனவர்களின் உறவினர்கள் கூறிய சோகக் கதைகளை தென்னிலங்கையிலிருந்து வந்தவர்கள் அனுதாபத்துடன் கேட்டறிந்தனர்.

ராஜகிரியவைச் சேர்ந்த சட்டத்தரணி எஸ் ஜீ புஞ்சிசேவா தலைமையில் மாத்தறை, களுத்துறை, பாணந்துறை, இரத்தினபுரி, கொழும்பு, மிரிகம, கண்டி போன்ற இடங்களைச் சேர்ந்த 12 பேர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். (ஐ-5)

# மனித உரிமை அறிக்கையில் அரசு, புலிகள் மீது கண்டனம்

மணிலா, பெப். 2

அமெரிக்க வெளிவிவகார ராஜாங்க அமைச்சு ஆண்டுதோறும் வெளியிடும் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இந்த ஆண்டுக்கான 15பக்க அறிக்கையில் இலங்கை இராணுவத்தையும் விடுதலைப் புலிகளையும் அது கடுமையாகக் கண்டித்துள்ளது.

கடந்த ஆண்டு யுத்தம் தீவிரமடைந்து காணப்பட்டதாகவும், முறையற்ற கைதுகள், கைதாகி காவலில் உள்ளோர் கடுமையாகச் சித்திரவதைக்கு உட்படுதல், நீதி விசாரணை இன்றிப் படுகொலைகள் செய்தல் ஆகிய மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவத்தைக் கண்டித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் 500 பேர் வரை கைது செய்யப்பட்டு இதுகால வரையில் காணாமற் போயுள்ளனர் என்பதையும் அது சுட்டிக் காட்டியுள்ளது.

காட்டிக் கொடுப்போர் எனச் சந்தேகப்படுவோரை விடுதலைப் புலிகள் நீதி விசாரணைகள் எதுவுமின்றி படுகொலை செய்து விடுவதாகவும் அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. (ஐ-9)

## பனம் கள் அடைக்கும் கருவி கிடைத்தது

நெடுந்தீவு, பெப். 2

ஊர்காவற்றுறை பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் விரைவில் போத்தலில் கள் அடைத்து விநியோகிக்கவுள்ளது.

போத்தலில்கள் அடைப்பதற்கான சாதனம் பனைவள அபிவிருத்திச் சபையினால் மேற்படி சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மாதம் ஒன்றிற்கு சுமார் பத்தாயிரம் போத்தல்கள் அடைக்கப்படும் எனத் தெரிகிறது. (ஐ-111)

## ஆசிரியர் தெரிவுக்கான வெட்டுப்புள்ளி விவரம்

அச்சுவேலி, பெப் 2

யாழ். கல்வி வலயம் இரண்டில் உள்ளடங்கும் பிரதேச செயலக பிரிவில் இருந்து ஆசிரியர் பதவிக்கு தெரிவு செய்யப்படவிருப்பவர்களுக்கான வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ். கல்விவலயம் 2 பகுதியில் எட்டு பிரதேச செயலகங்கள் உள்ளடங்குகின்றன. அவற்றின் வெட்டுப்புள்ளிகளின் விவரம் வருமாறு:-

★ வலிகாமம் வடக்கு—104

★ வடமராட்சி வடக்கு — 102

★ வடமராட்சி தென் மேற்கு — 101

★ வடமராட்சி கிழக்கு — 95

★ வலிகாமம் கிழக்கு — 91

★ வலிகாமம் தென்மேற்கு — 84

★ வலிகாமம் தெற்கு — 83

★ வலிகாமம் மேற்கு — 80

(ஐ 11)

# தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளை பொ. ஐ. முவில் சேர்க்க முயற்சி

கொழும்பு, பெப். 2

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட தமிழ் அரசியல் கட்சிகளை பொதுசன ஐக்கிய முன்னணியுடன் சேர்க்கும் நோக்கில் பொ. ஐ முன்னணியில் பிரதிநிதிகள தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளனர் என்று 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் விவசாய காணி அமைச்சருமான டி. எம். ஜயரத்தினா தலைமையில் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் வலுவான ஜனநாயக அரசியல் பின்னணியை உருவாக்குவதற்காக வடபகுதி உள்ளூராட்சி அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளை பொதுசன ஐக்கிய முன்னணியில் இணைக்க முடியுமாயின் அது பயன் தரும் முயற்சியாக அமையுமென பொ. ஐ. மு. அரசியல் குழு கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## செம்பியன்பற்றில் குடும்பஸ்தர் கைது

கடந்த 24 ஆந்திகதி வடமராட்சிக் கிழக்கில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது செம்பியன்பற்றைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான நவரட்ணம் [நவம்] [வயது - 29] என்பவர் படையினரால் சந்தேகத்தின் பேரில்கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ-36)

# வளைகுடா நெருக்கடியில் ஈராக்கிற்கு ஈரான் ஆதரவு

தெஹ்ரான், பெப். 2

ஈராக்கில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தொடர்ந்து அதன் மீது திணிக்கப்படும் இராணுவகுப்பதி தாக்குதல்கள்ஐ.நா.ஆயுதகண்காணிப்பாளர் தொடர்பான நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மேலும் அதிகரிக்கும் என ஈரான் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகளாலோ, பிரிட்டனாலோ தொடரப்படும் எந்தவிதமான தாக்குதல்களையும் தெஹ்ரான் எதிர்க்கும் என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் கமால் கராஸி ஈரானின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான இர்னாவுக்கு தெரிவித்தார்.

எந்தவிதமான இராணுவ அழுத்தமும்பிரச்சினைகளைச் சிக்கலாக்கும் என்றுதெரிவித்த கராஸி இரு தரப்பினரும் சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டு இராஜதந்திர ரீதியாகத் தீர்வுகாண முனையவேண்டுமென்றும் கூறினார். (ஐ 8)

## ஈராக் மீதான தாக்குதல் மிகக் கடுமையாக இருக்கும்

### அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

வாஷிங்டன், பெப். 2

ஈராக் மீதான தாக்குதல் பெரியதாகவும் மிகக் கடுமையானதாகவும் இருக்கும் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் ஹோகன் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் ஹோகன் இதனைத் தெரிவித்தார்.

தாக்குதலின் விளைவுகள் கடுமையானதாக இருக்கும் ஆனால் அத்தகைய தாக்குதலால் அதிபர் சதாம் ஹுசேய்னை பதவியில் இருந்து நீக்கவோ, மிகக் கொடூரமான ஆயுதங்களைக் களையவோ முடியாது என்றும் அவர் கூறினார். (ஐ)

உலக அரங்கில்

## டயானாவின் காருடன் மோதிய மர்ம வாகனத்தின் படம் சிக்கியதாக 'மிரர்' தகவல்

லண்டன், பெப். 2

பாரிஸ் நகரில் இளவரசி டயானா கடைசியாகப் பயணம் செய்த போது அவரது பென்ஸ் காருடன் மோதியதாகச் சந்தேகிக்கப்படும் மற்றொரு வாகனத்தின் வீடியோ படம் தம் வசம் உள்ளதாக பிரிட்டிஷ் செய்தித்தாளான 'மிரர்' தெரிவித்துள்ளது.

டயானாவின் காருடன் மோதி விட்டுத் தலைமறைவாகிய வெள்ளை நிற பியட்கார் ஒன்றை பிரெஞ்சு புலனாய்வுத் துறையினர் தேடிவருவது தெரிந்ததே. ஆனால் அந்த வாகனம் உண்மையிலேயே பியட் கார் அல்ல என்றும் "மிரர்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

விபத்து நடைபெறுவதற்கு முன்னர் அந்த இடத்தில் உல்லாசப் பயணிகள் சிலரால் எடுக்கப்பட்ட வீடியோ படத்திலேயே அந்த மர்ம வாகனம் காணப்படுவதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## லெபனானில் படை நடவடிக்கை

பெய்ரூட், பெப். 2

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் முன்னாள் தலைவரையும், அவரது ஆதரவாளர்களையும் தேடிப் பிடிக்கும் பெரும் நடவடிக்கையில் ஆயிரக்கணக்கான படையினர் [illegible] னர். (ஐ)

## காதல் விவகாரத்தில் சிக்கினார் ரொபின் குக்

லண்டன், பெப். 2

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் றொபின் குக்கை அமைச்சுப் பதவியிலிருந்து விலக்கி புதியதொரு பதவியில் நியமிக்க வேண்டுமென பத்திரிகைகள் விடுத்துள்ள கோரிக்கைக்கு தாம் இடமளிக்கப் போவதில்லையென்று பிரதமர் ரொனி பிளயர் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் குக் ஆசைநாயகி ஒருவரை திருமணம் செய்துகொள்ளும் விவகாரம் தொடர்பாகவே பத்திரிகைகள் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தன.

ரொபின் குக் ஒரு தனித்துவமான வெளிநாட்டு அமைச்சராவார் என்பதே பிரதமரின் நிலைப்பாடு என்று அவரது பிரதம பத்திரிகைப் பேச்சாளர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பத்திரிகைகளில் இது தொடர்பாக செய்தி வெளியானமை பரிதாபத்துக்குரியது என்றும்—

பிரதமர் பிளயரின் அரசாங்கத்தில் யார் இருப்பது என்பதை அவரே தீர்மானிப்பார் என்றும் பத்திரிகைப் பேச்சாளர் மேலும் கூறினார்.

வெளியுறவு அமைச்சர் குக் அவரது தினப் பதிவேட்டு செயலாளர் ஆன் புலென் என்பவரை பதவியிலிருந்து நீக்கி விட்டு அவருக்குப் பதிலாக தாம் திருமணம் செய்வதற்குத் திட்டமிட்டுள்ள அவரது ஆசைநாயகி கேனோர் ரெசனை நியமிக்க திட்டமிட்டதாக அவர் ஒப்புக்கொண்டதையடுத்தே குக் மீது கண்டனங்கள் எழுந்துள்ளன. (ஐ-8)

## எகிப்திய ராஜதந்திரி மெக்சிக்கோவில் கொலை

மெக்சிக்கோ, பெப். 2

மெக்சிக்கோவின் மேற்குப் பகுதி நகரான ஜெரேரோவில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த எகிப்திய இராஜ தந்திரியான முகமட் இஸ்மாயில் சாதேக் வன்முறைக் கும்பலொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மெக்சிக்கோவில் எகிப்திய தூதரக இரண்டாவது செயலாளரான சாதேக் காரில் சென்று கொண்டிருந்த போது காரை மறித்த துப்பாக்கியேந்திய நபர்கள் அவரது மனைவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சி செய்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

போதைப் பொருள் கடத்தல்காரர்களும், சட்ட விரோதமாக துப்பாக்கிகளை ஏந்திய நபர்களும், மார்க்ஸிஸ கெரில்லாக்களும் அட்டகாசம் செய்துவரும் மெக்சிக்கோவில் இந்தவாரம் வன்முறைக்குப் பலியான 15 ஆவது அதிகாரி சாதேக் ஆவார். (ஐ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலக் கல்வி வளர்ச்சியில் போர்ட்டரின் பங்கு அளப்பரியது

## பிரிவுபசார விழாவில் பாராட்டு

சண்டிலிப்பாய், பெப். 2

''எமது மாணவர்களின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கு கடந்த 17 வருடகாலமாக கலாநிதி போர்ட்டர் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார். கல்விப்பணியுடன் சமூக சேவைகளிலும் அவர் ஈடுபட்டு கல்லூரியினதும், இப்பகுதி பொதுமக்களினதும், கிராமத்தவர்களினதும் அன்பையும் நன்மதிப்பை பெற்றுள்ளனர்.''

வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியில் 17 வருடகாலமாக ஆங்கிலப் பேராசிரியராகக் கடமையாற்றி தமது தாயகமான அமெரிக்காவுக்கு திரும்பிச்செல்லும் கலாநிதி ஆ ஜி போர்ட்டருக்கு அளிக்கப்பட்ட பிரிவு உபசார வைபவத்திற்கு தலைமைவகித்து உரையாற்றிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ஜி. இராசநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்-

கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இவ் விழாவின் ஆரம்பத்தில் கலாநிதி போர்ட்டர் அவரது இல்லத்திலிருந்து மேளவாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். கிராம மக்களும் மலர் மாலைகள் அணிவித்து தங்களது நன்றியையும், அன்பையும் வெளிப்படுத்தினார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் தென்னிந்திய திருசபையைச் சேர்ந்தவர்கள், கிராம மக்கள் ஆகியோர் உட்பட பெரும் எண்ணிக்கையானோர். இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

கல்லூரி அதிபர் ஜீ இராசநாயகம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது—

எந்தவொரு பொறுப்பைக் கொடுத்தாலும் அதனை கடமையுணர்வுடன் செய்தல், நேரம் தவறாமை, யாருடனும் அன்பாக-அன்னியோன்னியமாகப் பழகுதல் ஆகிய நற்பண்புகள் அமையப்பெற்றவரான கலாநிதி போர்ட்டர் இக் கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்கும், மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றி வந்துள்ளார். வயதில் குறைந்த — ஆரம்ப நிலையிலுள்ள மாணவர்களுக்கு ஆங்கில மொழியைப் புகட்டுவதில் அதிக சிரத்தையுடன் போதித்து அவர்களின் மொழி அறிவை விருத்தி செய்வதில் தனித்துவம் பெற்றவராகத் திகழ்ந்தார்.

உலகின் பல பாகங்களிலும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுச் சென்றுள்ள இக் கல்லூரியின் பழைய மாணவர்களில் பலர் அங்கெல்லாம் ஆங்கில மொழியை சரிவரப் பேசுவதற்கு இவரின் கற்பித்தலே காரணமாக அமைந்தது. இவரின் சீரிய பணிகளை நாம் என்றும் மறந்து விடமுடியாது — என்றார்.

மாணவர் சங்கத்தலைவர் எஸ். சரவணபவன், கல்லூரி பதில் அதிபர் செல்வி எஸ் பி. குலசிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள். கல்லூரி இலச்சினை பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கம் ஒன்றும் கலாநிதி போர்ட்டருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

(ஐ-135)

## மருந்தகத்தை முழுநேரம் இயங்க வைக்கக் கோரிக்கை

செம்பியன்பற்று, பெப். 2

வடமராட்சிகிழக்குப் பகுதியில் உள்ள அம்பன் மத்திய மருந்தகத்தை முழுநேரமும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு மாமுனை சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பு மாகாணசுகாதாரப் பணிப்பாளருக்கு மகஜர் அனுப்பியுள்ளது.

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள அம்பன் மத்திய மருந்தகத்தையே இப் பகுதி மக்கள் நம்பி வாழ்கின்றனர். இந்த நிலையில் அம்பன் மத்திய மருந்தகம் தினமும் 12 மணியுடன் மூடப்படுகிறது. போக்குவரத்து நெருக்கடிகள் மத்தியில் வாழும் எமது பகுதி மக்கள் சுமார் 10 மைல் தூரம் நடந்து சென்றே மருத்துவ வசதிகளைப் பெற வேண்டிய நிலை உள்ளது என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-36)

## சார்ள்ஸின் மெய்க்காவலர்கள் கொழும்பில்

கொழும்பு, பெப் 2

பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸின் மெய்க்காப்பாளர்கள் இருவர் கொழும்புக்கு வருகை தந்துள்ளனர்.

சுதந்திரப் பொன் விழாவில் இளவரசர் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டுள்ளார். இளவரசரின் பாதுகாப்பு உறுதிப்படுத்துவதற்காகவே இவர்கள் வருகை தந்துள்ளார்கள் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-21)

## கருத்தரங்கு

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் ஜி சீ ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்கென எதிர் வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கருத்தரங்கு இடம்பெறும்.

''சுவாமி விவேகானந்தரின் ஆண்மையும், இன்றைய இளைஞர்களும்'' எனும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா இக் கருத்தரங்கில் உரையாற்றுவார்.

(ஐ-173)

## பயிற்சி

நெல்லியடி, பெப். 2

பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் பருத்தித்துறை, கட்டைவேலி மெததடிஸ்த திருச்சபை வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பெண்களுக்கிடையே பனை வேலை சிறு கைத் தொழில் பயிற்சித் திட்டத்தை அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ளது.

(ஐ-109)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 25 — 02 — 1945



மறைவு: 09 — 02 — 1992

அமரர் முத்துத்தர்பி இரத்தினவேலு
(சந்தனம்)

திதி: 2 - 2 - 1998

ஆண்டு ஆறு சென்றாலும் தங்கள் அன்பும், பாசமும் எங்கள் மனதை விட்டு நீங்காது. தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகன்.

''நாகேஸ்வரி வாசம்''
தேவாலய ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(53026)



# நினைவுப் பிரார்த்தனை

கொக்குவில் மேற்கு திரு. திருமதி வி. ஆறுமுகம் தம்பதிகள்

1-ம் ஆண்டு நினைவு 2-ம் ஆண்டு நினைவு

அன்னையும் பிதாவும்



அமரர் வி. ஆறுமுகம் திருமதி பாக்கியலக்சுமி ஆறுமுகம்
(இளைப்பாறிய
உணவுக் களஞ்சியப்பொறுப்பாளர்)

திதி: 02-02-1998

அன்புறு சிந்தையோடு அவனியில் - எம்மை
ஆளாக்கி, ஆனபயன் அனைத்தும் தந்த
அன்னைக்கும் பிதாவுக்கும் அஞ்சலிகள்!

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

(சி-2772)



## இடமாற்ற அறிவித்தல்

347, கே. கே. எஸ். வீதியில் இயங்கி வந்த
(மனோகரா சந்தி)

★ மதுரா மாளிகை ★
(கால்நடைத்தீன் வாணிபம்)

02—02—1998 இன்று திங்கட்கிழமை பகல் 11—00 மணிமுதல் 221, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் என்பதை வாடிக்கையாளருக்கு தெரிவிப்பதோடு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

மதுரா மாளிகை
221, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(53083)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ பண்ணாகம்
மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில்
கல்வி கற்று
1997 இல் நடைபெற்ற
ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த

1. ந. கௌதமன்
2. கு. கல்யாணி
3. கு. பராக்கிரமநிதி
4. ப. கிருபாஜினி
5. பா. சோபனா
6. சோ. மிர்தா
7. இ. தாட்சாயினி
8. கு. பிரணவன்
9. க. துளசி
10. இ. சுபாஜினி
11. த. அலெக்ஸ் அனாகிடன்

ஆகிய மாணவர்களையும் இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும், நெறிப்படுத்திய அதிபர் திரு கா. நடராசா அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலையின் வளர்ச்சி கண்டு பூரிப்படையும்
பழைய மாணவர்கள்

பண்ணாகம்.
சுழிபுரம்.

(53035)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த
இந்திரா பேக்கரி உரிமையாளராகிய
திருமதி குமாரசாமி இந்திரகுமாரியின் தந்தையார்

திரு. சிற்றம்பலம் நடராசபிள்ளை
(இளைப்பாறிய கிராமசேவையாளர்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மா. பே. உ. சங்கம்,
39, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்,

(கி/2758)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலை

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற
ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவர்கள்

1. செல்வன் கந்தையா மணிதீபன்
2. செல்வி சாதனா விஜயரத்தினம்
3. செல்வி யமுனா அருமைரத்தினம்

ஆகியோரையும், இவர்களின் வெற்றிக்குச் சிறப்பான முறையில் கற்பித்த ஆசிரியர்களையும், அவர்களை ஒழுங்காக வழிநடத்திய பெற்றோரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சபை.

யா/ மட்டுவில் வடக்கு,
அ. த. க. பாடசாலை.

(52940)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### காயத்திரி ஆனந்தரமணி தர்மசோதி

காலஞ்சென்ற
திரு. திருமதி சபா ஆனந்தரின் கனிஷ்ட புத்திரி
(விஞ்ஞான ஆசிரியை,
மன்/காக்கையன் குளம் மகாவித்தியாலயம்)

மலர்வு: 08 – 07 – 1955
உதிர்வு: 24 – 01 – 1988

திதி: 02 – 02 – 1998 (திங்கட்கிழமை)

ஆண்டு பத்து மறைந்ததம்மா,
ஆறுமோ எம்மனம் ஆறாதம்மா!

தங்கள் மறைவினால் துயருறும்;
கணவன், மகன் கோகுலன்,
மகள்மார் — கஸ்தூரி, புராதனி — சகோதரி.
சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள்,
மற்றும் உன் அன்பால் ஈர்க்கப்பட்ட
உறவினர்கள், நண்பர்கள்.

"ஸ்ரீ சாலினி"
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

(52943)

## தியானம் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 5

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிர தியான நிலைய திறப்பு விழாவும், "தியானம்" சிறப்பு மலர் வெளியீடும், குருபூஜா வழிபாடும் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணி முதல் குலபதி ஆறுமுகம் கந்தையா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும், கௌரவ விருந்தினராக டாக்டர் வ. சின்னப்புவும் கலந்து கொள்வார்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார்.

இந்து சமயம் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவன், பண்டிதர் சு. வேலுப்பிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார், ஸ்ரீமதி ஆறுமுகம் சுவாமிகள், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் முன்னிலையில் "தியானம்" சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

மலர் ஆய்வுரையை ஸ்கந்த வரோதயக்கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார். (ஐ-8)

## கூ. சங்கத்தில் சிமெந்து விநியோகம்

அரியாலை, பெப். 2

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு கூட்டுறவு சமாசத்தால் வழங்கப்பட்ட சிமெந்து பைக்கட்டுக்கள் அவ்வப்பகுதி சங்க கிளை குழுத்தலைவர், செயலாளர் போன்றோரின் சிபார்சுடனே வழங்கப்படும் என்று சங்கவட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்டளவு சிமெந்தே சமாசத்தால் வழங்கப்பட்டிருப்பதால் இந்நடவடிக்கையை சங்கம் மேற் கொண்டுள்ளது.

தற்போது ஒரு பைக்கட் சிமெந்து 375 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-17)

## மாணவருக்கு அன்பளிப்பு

திருநெல்வேலி, பெப். 2

கொக்குவில் லயன்ஸ் கழகத்தினர் இந்தப் பகுதியிலுள்ள நான்கு பாடசாலைகளின் மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை வழங்கியுள்ளனர். நாமகள் வித்தியாசாலை, இராமகிருஷ்ண வித்தியாலயம், ஞானபண்டித வித்தியாலயம், அமெரிக்க மிஷன் த.க. பாடசாலை ஆகியவற்றில் வசதியற்ற நிலையிலுள்ள மாணவர்களுக்கு இந்த அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

(ஐ-135)

## அறிவித்தல்

இத்தால் அறியத்தருவது சா. கணேசலிங்கத்திற்கு உரிய யாழ்ப்பாணம் இல. 356, K.K.S. வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் அறைவாடகைக்கு எடுத்துள்ளவர்கள் எங்களை உடனடியாக வந்து சந்திக்குமாறு வேண்டுகின்றேன்.

உரிமையாளர்:
சா. கணேசலிங்கம்,
273, கே. கே. எஸ். றோட்,
கொக்குவில்.

(53022)

## யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவு நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## அறிவித்தல்

இச்சமாசத்தால் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு அங்கத்துவ ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொருள்கள் சிலவும் அவற்றை சங்கங்கள் விற்க வேண்டிய ஆகக்கூடிய விலைகளும் பொது மக்களின் தகவலுக்காக கீழே தரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. | சிமெந்து | 375/- |
| 02. | மல்லி — கிலோ | 90/- |
| 03. | மிளகு — கிலோ | 300/- |
| 04. | சன்லைற் | 9/75 |
| 05. | மோட்டீன் — பக்கற் | 30/- |
| 06. | ஜாம் வகை | 59/- |
| 07. | கோழித்தீன் (முட்டை) 25 கிலோ | 430/- |
| 08. | கோழித்தீன் — (வளர்) 25 கிலோ | 430/- |
| 09. | கோழித்தீன் — (குஞ்சு) 25 கிலோ | 450/- |
| 10. | சுப்டன் மீன்ரின்—பெரிது | 44/- |
| 11. | அங்கர் — 400 கிராம் | 84/- |
| 12. | சேப் பெக்ஸ் | 4/75 |
| 13. | நூடில்ஸ் — பக்கற் | 20/50 |
| 14. | தீப்பெட்டி — டசின் | 18/- |


கந்தையா சிவஞானம்.
தலைவர்.

111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
31–01 98

(சி/ 2770)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 06 — 1928



மறைவு: 03 — 01 — 1998

### அமரர் சிற்றம்பலம் நடராசபிள்ளை
(இளைப்பாறிய கிராம சேவையாளர்)

எங்கள் பாசமிகு குடும்பத்தலைவனாய், அன்பின் திருவுருவமாய் வாழ்ந்து எங்களுக்கு நல்வாழ் வளித்த தெய்வமே! எங்களுக்காகவே வாழ்ந்து எங்கள் நினைவுடனே இயற்கை எய்திய நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஒரு மாதகாலமாகியும் உங்கள் திருவுருவம், பாசம், நினைவுகள் என்றென்றும் எங்கள் மனதில் நீங்காது நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர்

வரணி.

(53029)




# நியூ லலிதாஸ் ஜுவல்லறி
# திறப்பு விழா

நகுலா நகை மாடத்தின் கிளை ஸ்தாபனமாக

## நியூ லலிதாஸ் ஜுவல்லறி

இன்று 02-02-98 திங்கள் காலை 9-30 மணி- 10-30 மணி வரையுள்ள சுப வேளையில் திறந்து வைக்கப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் தரமான 22 கரட் தங்க வைர நகைகளுக்கு என பிரத்தியேகமாகத் திறந்து வைக்கப்படுகிறது.

## நியூ லலிதாஸ் ஜுவல்லறி

171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



(53025)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விண்ணப்பப்படிவம்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைக்குவிஞ்ஞான/ கலை/ வர்த்தக பட்டதாரி உதவி ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான படிவம் விற்பனையாகிறது. விலை 3/-. தபாலில் பெறுவதாயின் ரூபா 5 அனுப்பவும். விவரம் 29-01-98 வீரகேசரியில். நாயகபாலன் ஸ்ரோர்ஸ் மானிப்பாய். [49938]

### நூல்கள்

யாழ்ப்பாணத்தின் அந்த ஆறு மாதங்கள், உங்களது வரலாறு ஒவ்வொரு வீட்டிலும் நூலகத்திலும் இருக்க வேண்டிய நூல 275 நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியது, எங்கும் கிடைக்கும் 50/- [52996]

நெல்லியடி
**மஹாத்மா வெண் திரையில்**
02 - 02 - 98 முதல்
மம்முட்டி - தேவயானி நடித்த
மறுமலர்ச்சி
காட்சிகள்:- 10-30, 2-30
(சி/2765)

**ரெறாசோ சிப்ஸ் (Terrazzo Chips)**
★ கலர் பவுடர் (Pigments) (Holland and Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
★ கதவுப் பூட்டுகள் (Union English) (Direct Importers)
**றம்சன்ஸ்**
இல: 443
பழைய சோனகத்தெரு
கொழும்பு - 12
தொலைபேசி:
431511, 434411

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19 — 05 — 1931

மறைவு: 02 — 02 — 1997

### அமரர் அந்தோனிப்பிள்ளை மரியதாசன்

(யாழ்/ இந்து இளைப்பாறிய கணித ஆசிரியர்)

நேர்மையுடனும், தியாக சிந்தனையுடனும், கடமையே கண்ணாக அயராது உழைத்திட்ட எங்கள் அப்பாவே! எங்களுக்கு நேர்மையுடனும் தியாக உள்ளத்துடனும், கடமை உணர்வுடனும் வாழ வேண்டுமென்று வழி காட்டியவரே! நாங்கள் என்றும் தங்கள் வழியையே பின்பற்றுகின்றோம். இதுவே உங்கள் ஆத்மாவுக்கு சாந்தி அளிக்கும். எம்அன்பு அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளோடு வாழும்!
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"மங்கள இல்லம்"
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய். (53011)

## வாழ்க! வளர்க! என வாழ்த்துகின்றோம்

யா/ நீர்வேலி சீ. சீ. தமிழ்க் கலவன் பாடசாலையில்
ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்து பெருமை தேடித்தந்துள்ள மாணவர்கள்

செல்வன் அருணகிரிநாதன் ஹரீந்திரன் 135 புள்ளிகள் (கோட்டமட்டத்தில் 2ஆம் இடம்)
செல்வி ஷம்பிகா இராசரத்தினம் 133 புள்ளிகள் (கோட்ட மட்டத்தில் 4ஆம் இடம்)
செல்வி சிந்துசா குகதாசன் 106 புள்ளிகள்
செல்வன் சிவலிங்கம் விஜிகரன் 102 புள்ளிகள்
செல்வி கார்த்திகா இராசையா 97 புள்ளிகள்

ஆகியோர்களை வாழ்த்திப் பாராட்டுவதுடன் இவர்களை நெறிப்படுத்திய எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ நீர்வேலி சீ. சீ. த. க. பாடசாலை
நீர்வேலி. (53014)

ஓம்
விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஈசுர வருடம் தை மாதம் 20 ஆம் நாள் திங்கட்கிழமை (2- 2—1998) பகல் 12.36 தொடக்கம் 2.06 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் **சேதுராமன் (சேது)** அவர்கட்கும் | எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **செல்வேந்திராதேவி (செல்வா)** அவர்கட்கும் |
|---|---|

இறைவன் திருவருள் துணை கொண்டு திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் பாணிக்கிரகண மங்கல நாண்பூட்டு விழா நடைபெற இறையருள் கூடியுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்,

இவ்வண்ணம், தங்கள் நல்வரவை விரும்பும்:

| திரு. திருமதி சாமிநாதபத்தர் நாராயணசாமி 133, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். | திருமதி வாலாம்பிகை சின்னராசா ஆச்சாரியாரும், குடும்பத்தினரும். |
|---|---|

மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை ... வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

(52992) (இரு வீட்டார் அழைப்பு)

## வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பொதுச் சேவைக்கு விஞ்ஞான, கலை, வர்த்தக பட்டதாரி உதவி ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளுதல் - 1998

மேற்படி விடயத்துக்கான விவரங்கள், விண்ணப்பப்படிவங்கள் 02—02—98 திங்கட்கிழமை முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண கல்வி நிலையம்**
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)
பஸ் நிலைய அருகில் - யாழ்ப்பாணம்
- நிர்வாகி
(53030)

யாழ். நகரின்
**முதன்மை ஆசிரியர் குழுவின் இணையற்ற சேவையில்...**


The Express Institute
IRUPALAI KOPAY

25 வருடங்களாக கணித பாடத்தில் விசேட பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னணி வகித்த
**வரதன் ஆசிரியரின்**

கணித பாடத்திற்கான
தீவிரப் பயிற்சி வகுப்புகள்
ஆண்டு 09, 10, 11 இல்
II ஆவது பிரிவு

பெப். 02 இல் ஆரம்பம்
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(53031)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 22 — 09 — 1941

ஆண்டவன் அடியில்: 14 — 01 — 1997

### அமரர் வேலுப்பிள்ளை சண்முகநாதன் (சண்)

(முன்னாள் இலங்கை வங்கி மேற்பார்வையாளர்)

திதி: 02 — 02 — 1998

ஆண்டொன்று ஆனாலும் ஆறாத துயரமிது
நீண்ட பயணமிதை பாதியிலே முடித்த தேனோ?
மீண்டும் எம்முடனே வாழ வருவீரோ?
யாண்டும்இடும்பையின்றிஇறைபதம்சேர்ந்துவிட்டீர்.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்,
உரும்பிராய்.

தங்கை
வசந்தா குகராஜன், சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (53023)

## பெற்றுக்கொள்ளுங்கள்!

**மலிவு விலை!**

- புதிய நேரப்படி பஞ்சாங்க தகவல்களைக் கொண்ட ஒரேயொரு கலண்டர்
  திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்
  விலை ரூபா 45 மட்டுமே.
- கையடக்கமான பல தகவல்கள் கொண்ட அழகிய பதிப்பு
  திருக்கணித டயறி
  விலை ரூபா 60 மட்டுமே.
- 10 - 01 - 98 இல் நிகழ்ந்த
  வியாழமாற்றப் பலாபலன்கள்
  விலை ரூபா 20 மட்டுமே.

எல்லா புத்தக வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
[சி-2760]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் இன்று கொழும்பு வருகிறார்

கொழும்பு, பெப் 2
பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார்.

கொழும்பில் நடைபெறவுள்ள இலங்கையின் சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சியில் அவர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இளவரசரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக அவரது பாதுகாப்புப் பிரிவினர் ஏற்கனவே கொழும்பு வந்துள்ளனர்.

சார்ள்ஸ் கொழும்பில் விஜயம் செய்யும் இடங்களின் பாதுகாப்பு நிலைவரங்களை அவர்கள் ஏற்கனவே ஆராய்ந்துள்ளனர்.

தென்னாசியாவின் மூன்று நாடுகளுக்கான விஜயத்தின் முதற்கட்டமாக கொழும்புக்கு வருகை தரும் இளவரசர் சார்ள்ஸ் நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கும் செல்லவுள்ளார்.

நேபாளத்திற்கு செல்லும் சார்ள்ஸ் காத்மண்டுவில் உள்ள



'எய்ட்ஸ்' தொற்றிய சிறுவர்களின் இல்லம் ஒன்றுக்கும் செல்வார்.

இந்தியாவின் மும்பாய் நகர வீதிகளில் எச். ஐ. வி. தொற்றிய நிலையில் மீட்கப்பட்ட சிறுவர்களே அந்த புனர்வாழ்வு இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். மறைந்த இளவரசி டயானாவும் தமது நேபாள விஜயத்தின் போது இந்த சிறுவர் இல்லத்துக்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## வலி. தெற்கு ச. ச. நிலையங்களின் விளையாட்டுப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு, பெப் 2
வலிகாமம் தெற்கு சன சமூக நிலையங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகளை நடத்த வலிகாமம் தெற்கு சன சமூக நிலையங்களின் சமாசத்தினர் தீர்மானித்துள்ளனர்.

உதைபந்தாட்டம், தாச்சி, கிரிக்கெற், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் போட்டி நடத்துவதெனவும்—

இப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் சமாசத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலமே விண்ணப்பிக்கப்பட வேண்டும் எனவும் சமாசத்தினர் தெரிவித்துள்ளனர்.

விண்ணப்பங்களை 3 ஆம் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறு சமாசங்களின் தலைவர் ஞா. தேவச்சந்திரன் தெரிவித்தார். (ஐ-152)

## தபாற் பெட்டி

சுழிபுரம் தபாற்கந்தோர் முன்பாக பொதுமக்கள் பாவனைக்காக தபாற் பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. சுழிபுரம் பகுதியில் சில இடங்களில் தபாற்பெட்டிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. (ஐ-28)

## பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் பீரிஸ் பேச்சுவார்த்தை

கொழும்பு, பெப். 2
நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இங்கிலாந்திலும் விடுதலைப்புலிகளை தடை செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை லண்டனில் மேற்கொண்டு வருகின்றார்.

தற்போது லண்டனில் தங்கியுள்ள அவர் பிரிட்டனின் ஆளும் கட்சி எதிர்கட்சி பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியுள்ளார்.

ஜனாதிபதி — எதிர்க்கட்சி தலைவர் இருதரப்பு உடன்படிக்கையை தயாரித்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸையும் அவர் சந்தித்துப் பேசினார்.

(ஐ-21)

## கிழக்கு உள்ளூராட்சி தேர்தல்: தமிழ்க்கட்சிகள் தயாராகின்றன

மட்டக்களப்பு, பெப் 2
யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்துள்ளதை அடுத்து கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு தமிழ் அரசியற்கட்சிகள் தயாராகிவருகின்றன.

எதிர்வரும் மார்ச் இறுதியுடன் இவற்றின் பதவிக்காலம் முடிவடையவிருக்கின்றது.

ரெலோ, புளொட், த. வி. கூ. ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி., ஈரோஸ் ஆகிய தமிழ்க்கட்சிகளுடன் ஸ்ரீ. ல. மு. கா., ஐ. தே. க, பொ. ம. ஐ. முன்னணி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் கிழக்கு தேர்தலில் போட்டியிடத் தயாராகின்றன.

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் மேற்படி தேர்தலுக்கு முன்பு இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-21)

## உயர் தொழில்நுட்ப நிறுவன 2 ஆம் ஆண்டுப் பரீட்சைகள்

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் இரு கற்கை நெறிகளுக்கான இரண்டாம் ஆண்டுப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா இரண்டாம் ஆண்டுப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகி 13 ஆம் திகதி வரை நடைபெறும்.

உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா கற்கை நெறிக்கான இரண்டாம் ஆண்டுப்பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகி 18 ஆம் திகதி வரை நடைபெறும். காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் பரீட்சைகள் நண்பகல் 12 மணிக்கும், நண்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் பரீட்சைகள் மாலை 4 மணிக்கும் முடிவடையும்.

இப்பரீட்சைகளுக்கான நேர அட்டவணையை திணைக்களத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-9)

## சமய சந்நிதியில்

யாழ். சந்நிதிமடம் அரசடி வீதி செல்வ நாகபூஷணி அம்பாள திருக்கோவிலில் கண்ணன், பாலமுருகன், ஆஞ்சநேயர் விக்கிரகங்களின் நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறும். இந்த நிகழ்வில் அருட்சொல்வாரி க. சிவசண்முகமூர்த்தி ''கண்ணனும் அவன் பக்தன் ஆஞ்சநேயரும்'' என்னும் பொருள் பற்றி பக்கவாத்தியங்கள் சகிதம் சங்கீத கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

(இ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 2
மாதகல் - நுணைசையம்பதி ஸ்ரீ முருகமூர்த்தி கோயிலின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 11 30 மணி முதல் நடைபெறும்.

மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்ட கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு விநாயக வழிபாடுடன் ஆரம்பமாகி கும்பாபிஷேகம் நடைபெறும் வரை தொடர்ந்து நடைபெறும்.

(ஐ-4)

★ ★ ★

நெல்லியடி, பெப். 2
துன்னாலை அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்திலும், தென் புலோலி ஸ்ரீ முதலிஅம்பாள் ஆலயத்திலும் தைப்பூச உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ-109)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 2
யாழ்ப்பாணம் கல்லூன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பாலஸ்தாபன வைபவம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-8)

★ ★ ★

குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நிறைவடையவுள்ளது. அன்று காலை 5.30 மணிக்கு முதற் திருப்பலியும், 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். திருவிழாத் திருப்பலி யாழ். ஆயர் அதி. வந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் ஒப்புக் கொடுக்கப்படும்.

கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஆலயத் திருவிழா தொடர்ந்து நடைபெற்று வந்தது.

நவநாள் ஆராதனைகளைத் தொடர்ந்து திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெற உள்ள திருப்பலியில் மெழுகுவர்த்திகள் ஆசிர்வதிக்கப்படுவதுடன் மாலை 4 30 மணிக்கு நற்கருணை ஆராதனையும், பவனியும், ஆசீர்வாதமும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளில் [illegible] யைச் சேர்ந்த அருட்தந்தை ஜீவேந்திரா போல் மறை உரை ஆற்றினார். (ஐ-51)

# செய்திக் கொத்து

## நீர் விநியோக வசதி

நல்லூர், பெப். 2
வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தொண்டமானாறு பகுதிகளில் உள்ள மக்களின் குடி தண்ணீர் வசதியைக் கருத்திற் கொண்டு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் இப்பகுதிகளில் குடிநீர் விநியோகத் தொட்டிகளை அமைக்க உள்ளது.

ஏற்கனவே தீவுப்பகுதி உட்பட குடாநாட்டின் பெரும்பாலான இடங்களி இந் நிறுவனம் குடி தண்ணீர்த் தொட்டிகளை அமைத்துள்ளது. இதன் மூலம் சுமார் 40 ஆயிரம் மக்கள் பயன் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[ஐ-103]

## கசிப்பு வேட்டை

நெல்லியடி, பெப். 2
வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி, விற்பனையாளர்கள் மீது, கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கலால் பகுதியினருடன் இணைந்து திடீர் வேட்டை நடத்தி பெருமளவு கசிப்பு, கோடா என்பனவற்றைக் கைப்பற்றியுள்ளது.

(ஐ-190)

## ஒரு பிரித்து திருட்டு

நெல்லியடி, பெப். 2
வடமராட்சிப் பகுதியிலுள்ள தம்பசிட்டியில் ஆள்களில்லாத வீடுகளில் ஓடு பிரித்து உட்புகும் திருடர்கள் அங்கிருந்து பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிச் செல்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரது வீட்டில் பெறுமதிமிக்க வீட்டுப் பாவனைப் பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

(ஐ-109)

## திருமுறைப் படிப்பு

சுழிபுரம், பெப். 2
சுழிபுரம் மேற்கு பெரிய தம்பிரான் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை முதல் தினமும் பன்னிரு திருமுறைப் படிப்பு தொடர்ந்து நடைபெறவுள்ளது. தினமும் காலைப் பூசையைத் தொடர்ந்து திருமுறைப் படிப்பு பகல் 10 மணிவரை நடைபெறும். இப்படிப்பு தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு நடைபெறும்.

(ஐ-28)

## மாணவர் கௌரவிப்பு

சுழிபுரம், பெப். 2
பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்த பதினொரு மாணவர்களையும் கௌரவித்துப் பாராட்டி பரிசுகள் வழங்கவுள்ளனர். இந்த கௌரவிப்பு நிகழ்வை மன்றத்தினர் வருடாந்தம் நடத்தி வருகின்றனர். (ஐ-28)

## ஆலயத்தில் பரிசளிப்பு

சுழிபுரம் மேற்கு தூர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற மனனப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசளிப்பு வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை ஆலயத்தில் நடைபெறும். இதற்கான ஏற்பாட்டை ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

(ஐ 28)

## திருமுறை படிப்பு பூர்த்தி

சுழிபுரம், பெப். 2
கடந்த மூன்று மாதங்களாக வழக்கம்பரை அம்மன் கோயிலில் நடைபெற்று வந்த பன்னிரு திருமுறைப் படிப்பு பூர்த்தி எதிர்வரும் ஞாயிறு காலை நடைபெறவுள்ளது. பூர்த்தி தினத்தன்று ஏட்டுச் சுவடிகள் ஊர்வலமாக சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுதர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். (ஐ-28)

## பஸ்கள் திருத்தப்பட்டு சேவையில்

பருத்தித்துறை டிப்போவில் பழுதடைந்த நிலையில் கட்டையில் முடங்கிக் கிடந்த பஸ்கள், திருத்தப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

கைவசமிருந்த உதிரிப்பாகங்களின் உதவியுடனேயே பழுதடைந்த பஸ்கள் திருத்தப்பட்டுள்ளதாக டிப்போ விற்பதில் முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-109)

## பஸ் ஊழியருக்கு கொடுப்பனவு

நெல்லியடி, பெப். 2
உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் பணியில் சேவையாற்றிய பருத்தித்துறை டிப்போ ஊழியர்களுக்கு நாளொன்றுக்கு தலா இருநூறுரூபா வீதம் ஆயிரம்ரூபா விசேட கொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளது. (ஐ-109)

## படையினர் புதியபாஸ்

செம்பியன்பற்று, பெப். 2
வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள விவசாயிகளும் மீன் வியாபாரிகளும் அவர்களது உற்பத்திப் பொருள்களை பாதுகாப்பு அரணுக்குவெளியே கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு படையினர் புதிய ''பாஸ்'' ஒன்றை வழங்கி உள்ளனர். (ஐ-36)

## முதலை பிடிபட்டது

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள நெல்லியானில் பல கால்நடைகளை தொடர்ச்சியாய் பிடித்துத் தின்ற முதலையை இப்பகுதி இளைஞர்கள் காத்திருந்து பிடித்தனர்.

கடந்த திங்கட்கிழமை இம் முதலை மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட பின்னர் கொல்லப்பட்டது

முதலையின் வயிற்றினுள் ஆட்டிக்குட்டி ஒன்று இருந்ததாக அவர்கள் தெரிவித்தனர். (ஐ-36)

## பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு

அச்சுவேலி, பெப் 2
வில்லிசைப் புலவர் கே. என். கணபதிப்பிள்ளையின் (சின்னமணி) மணிவிழா அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் அதிபர் திருமதி சகுந்தல தேவி கனகராசா தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் மணிவிழாவில் சின்னமணி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.

(ஐ-11)

## சுழிபுரத்தில் நெல் அறுவடை

சுழிபுரம், பெப். 2
சுழிபுரப் பகுதியில் குறைந்த மாத நெல் விதைத்தவர்கள் அறுவடையை ஆரம்பித்துள்ளனர். நீண்டகால இன நெல் விதைப்புச் செய்தவர்கள் வயலுக்குத் தண்ணீர் இறைத்து வருகின்றனர். (ஐ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் மீதான தாக்குதலை இந்தியா சகிக்க மாட்டாது!

## அதிபர் கிளின்ரனுக்கு குஜ்ரால் கடிதம்

புதுடில்லி, பெப். 2

ஈராக்கிற்கு எதிராகப் புதியதொரு யுத்தத்தை கட்டவிழ்த்து விட வேண்டாம் என்று இந்தியப் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் அமெரிக்க அதிபரிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக இந்தியாவின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை அவர் கிளின்ரனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மேற்கு வங்காள இடதுசாரிக் கட்சிக்கும், ஐக்கிய முன்னணிக்கும் தேர்தலில் பெருவெற்றி கிடைக்க வேண்டும் என வாழ்த்துவதற்காக கல்கத்தாவில் திரண்ட பல்லாயிரக் கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் பிரதமர் குஜ்ரால் உரையாற்றினார். அச்சமயம் ஈராக் மீதான தாக்குதலை நடத்த வேண்டாம் என்று கேட்டு தாம் அதிபர் கிளின்ரனுக்குக் கடிதம் எழுதியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா ஈராக்கிற்கு எதிராக மீண்டும் வலுச் சண்டைக்குப் போவதை இந்தியா சகித்துக் கொள்ளாது.

அரேபியர்கள் பாரம்பரியமாகவே இந்தியாவின் நண்பர்கள். இந்தியாவின் வணிகத் துறை சடுபாடுகள் மத்திய கிழக்கில் உள்ளன. அரேபியர்கள் மீது கொலைவெறி கொண்ட இன்னொரு தாக்குதல் நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மத்திய கிழக்கில் போர் வெடிக்குமானால் அது தற்போது அங்கு பணிபுரியும் 20 லட்சம் இந்தியர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும்.

—இவ்வாறு குஜ்ரால் தமது உரையில் தெரிவித்தார்.

அமெரிக்கா மீது நெருக்குதல் கொடுக்குமாறு கேட்டு ரஷ்யா, சீனா உட்பட ஐந்து முக்கிய நாடுகளின் தலைவர்களுக்கு தாம் கடிதம் எழுதியுள்ளதாகவும் குஜ்ரால் தெரிவித்தார். (ஐ)

## 90 கோடி மக்களுக்கு வெளிநாட்டவர் பிரதமரா?

### வெட்கக்கேடு என்கிறார் ஜெயலலிதா



சென்னை, பெப். 2

வெளிநாட்டவர் எவரும் இந்தியாவின் பிரதமராக வருவதை தமது கட்சி எதிர்க்கும் என்று அ.இ.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்தார்.

இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி ஆகியோர் மீது தாம் பெருமதிப்பு வைத்துள்ளதாகவும், ஆனால் 90 கோடி மக்கள் உள்ள நாட்டில் வெளிநாட்டவர் ஒருவர் பிரதமராவது வெட்கக்கேடான விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தலில் பெரும்பான்மை பலம் பெற்று காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் சோனியாகாந்தியே பிரதமர் ஆவார் என்று சீதாராம்கேசரி தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து ஜெயலலிதா இவ்வாறு கூறியுள்ளார். (ஐ)

கற்களை வீசிய பொதுமக்கள் மீது

## இந்திய ராணுவம் சுட்டு காஷ்மீரில் 8 பேர் பலி!

ஸ்ரீநகர், பெப். 2

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதைத் தடுக்க முயன்ற பொதுமக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய அப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்தனர்; 40 பேர் காயமடைந்தனர்.

முஸ்லிம்களின் புனித தினமான றம்ழான் தினத்தன்று தோடா மாவட்டத்தில் ஒதுக்குப் புறமாக உள்ள கிராமம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தீவிரவாதிகளைக் கைது செய்வதற்காக தமது வீடுகளை படையினர் சோதனையிடுவதை எதிர்த்து கற்களை வீசிய மக்கள் மீது படையினர் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜம்மு காஷ்மீர் மாநில அரசு இச்சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளது. (ஐ)

அகாலிதள் கட்சியின் பிரசார மேடைகளில் உரை:

## பிரதமர் குஜ்ராலிடம் விளக்கம் ஐக்கிய முன்னணி கோரியுள்ளது

புதுடில்லி, பெப். 2

அகாலி தளத்தின் தேர்தல் மேடைகளில் பிரதமர் குஜ்ரால் உரையாற்றக் கூடாது என ஐக்கிய முன்னணி பிறப்பித்த உத்தரவை மீறியதற்காக பிரதமர் குஜ்ராலிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

இது குறித்து ஐக்கிய முன்னணியின் பிரமுகர்கள் கருத்துத் தெரிவிக்கையில் — ஜலந்தர் தொகுதிக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யும் வேளையில் பிரதமர் குஜ்ரால் அகாலிதளம், பாரதீய ஜனதாக்கட்சிப் பிரமுகர்களுடன் கூடவே சென்றுள்ளார். இதற்காக எமது ஆட்சேபனைகளை பிரதமரிடம் தெரிவித்தோம், பஞ்சாப்பின் நலனுக்காக ஐக்கிய முன்னணி பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பிரதமர் குஜ்ராலை ஆதரிக்க வேண்டிய கட்டாயம் இம்மாநில மக்களுக்கு உள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் நடைபெறும் அகாலி தள் கட்சியின் தேர்தல் கூட்ட மேடைகளில் தோன்ற வேண்டாமென பிரதமர் குஜ்ராலுக்கு தாம் பல தடவை தெரிவித்திருந்தும் எமது வேண்டுகோள்களை பிரதமர் மீறி விட்டார். இது குறித்து அவர் எமக்கு விரிவாக விளக்கமளிக்க வேண்டும் — எனத் தெரிவித்துள்ளார்கள். (ஐ-8)

**இந்தியச் செய்திகள்**

### சுவரொட்டி ஒட்டிய மூவர் கைது

சென்னை, பெப். 2

ராஜீவ்காந்தி கொலை வழக்குத் தொடர்பான தீர்ப்பை எதிர்த்து பெரம்பூர் சுரங்கப்பாதை அருகே வெள்ளிக்கிழமை இரவு சுவரொட்டிகளை ஒட்டிய மூவரை பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

### நடிகை லதா திண்டுக்கலில் போட்டி

சென்னை, பெப். 2

தமிழ்நாட்டில் காங்கிரஸின் கூட்டணிக் கட்சியான போட்டி அ.தி.மு.க. ஐந்து மக்களவைத் தொகுதிகளில் போட்டியிடவுள்ளது. இதில் நடிகை லதா திண்டுக்கல் தொகுதியில் போட்டியிடுகிறார். (ஐ)

ஊழியர்கள் போராட்டத்தால்

## உள்நாட்டு வெளிநாட்டு விமான சேவை இந்தியாவில் சீர்குலைவு

புதுடில்லி, பெப். 2

விமானப் போக்குவரத்துக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப்போராட்டம் காரணமாக இந்தியா முழுவதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சேவைகள் சீர்குலைந்துள்ளன.

நிலைமை நெருக்கடியாக உருவெடுத்ததை அடுத்து சிவில் விமானப்போக்குவரத்துத் துறை அமைச்சர் இப்ராஹிம் நேற்று முன்தினம் இரவு விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஊழியர் சங்கப்பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான சேவைகளை மிகமோசமாகப் பாதித்துள்ள இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டத்தை அமுல் செய்யப்போவதாக அரசு எச்சரித்துள்ளது.

இந்தியாவிலுள்ள சுமார் 650 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் சம்பளக் கோரிக்கை குறித்தும் மற்றும் பல விடயங்கள் குறித்தும் இந்தக்காலவரையறையற்ற வேலை நிறுத்தப்போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். (ஐ-8)

### போராட்டம் இடைநிறுத்தம்

இந்தியாவில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விமானக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் அமைப்பு தனது வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்ததாக பிந்திக் கிடைத்தசெய்திதெரிவித்தது.

மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி. எம். இப்ராஹிமின் கண்காணிப்பின் கீழ் விமானத் துறை நிர்வாகத்தினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. [ஐ]

## தேர்தலைக் குழப்ப பாகிஸ்தான் சதி!

### இந்தியா குற்றச்சாட்டு

இந்தியாவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலை குழப்ப பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ. எஸ். ஐ. வெளிநாட்டுக் கூலிப் படையினரை நாட்டுக்குள் அனுப்ப முயற்சித்து வருவதாக இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

கடினமான மலைப் பகுதிகளில் அமைந்த பாதைகள் வழியாக கூலிப்படைகளை இந்தியாவுக்குள் அனுப்ப ஐ. எஸ். ஐ. முயன்று வருவதாக மத்திய உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்ததாக பீ. ரீ. ஐ. செய்தி கூறுகிறது.

ஜம்மு காஷ்மீர் வழியாக கூலிப்படைகளை அனுப்ப தீவிரவாதிகளுக்கு ஐ.எஸ்.ஐ. அமைப்பு பெருந்தொகை நிதி வழங்குவதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## சீ. பி. ஐ. இயக்குநராக டீ. ஆர். கார்த்திகேயன்

புதுடில்லி, பெப். 2

மத்திய புலனாய்வுத் துறையின் (சி. பி. ஐ.) இயக்குநராக டீ. ஆர். கார்த்திகேயன் நேற்று பொறுப்பேற்றார்.

சி. பி. ஐ. இயக்குநர் ஆர். கே. சர்மாவின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்தே கார்த்திகேயன் அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கை புலன்விசாரணை செய்த சிறப்பு விசாரணைக் குழுவுக்கு கார்த்திகேயன் தலைவராக இருந்தார். (ஐ)

## பி. ஜே. பி வெற்றிபெற இராமேஸ்வரத்தில் யாகம்!

புதுடில்லி, பெப். 2

இந்தியப் பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றவும், வாஜ்பாய் பிரதமராக வரவேண்டியும் இராமேஸ்வரத்தில் உள்ள அருள்மிகு ராமநாத சுவாமி ஆலயத்தின் அருகே யாகம் ஒன்றை நடத்த அக்கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

20 வேத விற்பனர்கள் இந்த யாகத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த யாகத்தைத் தொடர்ந்து நாட்டில் உள்ள எல்லா சிவ தலங்களிலும் யாகங்களை நடத்தவும் பி ஜே. பி. திட்டமிட்டுள்ளது. (ஐ)


## சிறப்பாகப் பாராட்டுகின்றோம்

பிரபல பாடசாலையான
யா/ஹாட்லிக் கல்லூரி
நடத்திய 1998 ஆம் ஆண்டுக்கான ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றிய இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுள் அதிஉச்சப் புள்ளி (174) யைப் பெற்று முதலாவதாகச் சித்தியடைந்த
யா/கற்கோவளம் மெ. மி. த. க, பாடசாலை
மாணவன்
செல்வன் அருந்தவராசா ஆதித்தன்
1997 ஆம் ஆண்டு 5 புலமைப் பரிசிற் பரீட்சையிலும் 130 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரையும், அதிபரையும், ஆசிரியர்களையும் பாராட்டி மகிழ்கின்றோம்.

பெற்றோர் ஆசிரியர் சங்கம்
யா/ கற்கோவளம்
மெ. மி. த. க. பாடசாலை,
பருத்தித்துறை.

(சி/2773)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 11 மாதங்களில் 73 பேர் காணாமற்போய்விட்டனர்

## கிளிநொச்சி மாவட்டத்தில்

வவுனியா, பெப். 2

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 11 மாத காலத்தில் 73 பேர் காணாமற் போய் விட்டனர்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் செய்யப்பட்ட பதிவுகளின் படி இத்தரவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதைவிட மேலும் பலர் காணாமற் போயுள்ளனர் என்றும்-

அவர்கள் விவரம் குறித்து இன்னும் பதியப்பட வில்லை என்றும்-தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையை யடுத்து இடம் பெயர்ந்த மக்கள் வீடுகளைப் பார்க்கச் சென்றபோதும்- பொருள்களைஎடுத்துச்செல்லச்சென்ற போதுமே இவ்வாறு காணாமற் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1996-ஆம் ஆண்டு ஜூலையில் இருந்து 1997ஆம் ஆண்டு மே மாதம் வரையுமே மேற் குறித்த எண்ணிக்கையினர் காணாமற் போயுள்ளனர்.

இவர்களில் 50 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகமாகும்.

25 வயதுக்குக் குறைந்தவர்கள் 20 பேரும் — 26 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப் பட்டோர் 9 பேரும் - 31 வயதுக்கும்40வயதுக்கும் இடைப் பட்டோர் 21 பேரும்-

50வயதுக்கு மேற்பட்டவர்கள் 23 பேரும் — காணாமற் போயுள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# குருநகர் ஐந்து மாடிப்பகுதி படையினரால் சுற்றிவளைப்பு

குருநகர், பெப். 2

குருநகர் ஐந்துமாடிப் பகுதி நேற்று படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

காலை 8-00 மணியில் இருந்து மாலை வரை இச்சுற்றி வளைப்பு இடம் பெற்றது.

ஐந்துமாடியிலுள்ள குடியிருப்பாளர்கள் அனைவரும் ஐந்து மாடிக்கு முன்னால் உள்ள விளையாட்டு மைதானத்துக்கு அழைக்கப்பட்டு இராணுவ சோதனையின் பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிய வில்லை.

அதே சமயம் குருநகர் மீனவர்கள் நேற்று மீன்பிடிக்கச் செல்லாததால் குருநகர் பொதுச் சந்தையில் மீனின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. குறைந்தளவு மீனே நேற்று சந்தையில் விற்பனைக்கு வந்திருந்தது. (இ-51)

## திருமலையிலும் தாக்குதல்

வவுனியா, பெப். 2

திருகோணமலையில் பொலிஸாரின் காவலரண்கள் மீதும் நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை. (இ-3)

## கிரிக்கெட் அணி இன்று யாழ். திரும்புகிறது

யாழ்ப்பாணம், பெப். 2

தெற்கே விஜயம் மேற் கொண்ட யாழ் மாவட்ட கிரிக்கெட் அணி இன்று யாழ்ப்பாணம் திரும்புகிறது.

காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய இடங்களில் மூன்று போட்டிகளில் இவர்கள் பங்கு பற்றினர். (இ-3)

## வயல்களில் சந்துப்புழு தாக்கம்

வடமராட்சி, பெப் 2

வடமராட்சிப் பிரதேசத்தில் சந்துப்புழுத் தாக்கத்தினால் நெல் விளைச்சல் பாதிப்படைந்துள்ளது. நெற் கதிர்கள் முற்றிவரும் நேரத்தில் இத்தாக்கம் ஏற்பட்டதால் நெல் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ-173)

# உதயன்

## கண்ணுக்குத் தெரியாத எதிரி

1996 ஏப்ரலில் குடா நாட்டு மக்கள் மீளக் குடியமர்வதற்கு முன்னர், இப்பிரதேசம் "செல் வந்த" பூமி என்று அழைக்கப்பட்டது உண்டு. மேடைகளில் கவிதைகளில் மட்டுமன்றி மக்களின் கலந்துரையாடல்களில் கூட அந்தச் சொல் சர்வசாதாரணமாகப் பயன் படுத்தப்பட்டுவந்தது.

பலாலி இராணுவத் தளத்தில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் யாழ்ப்பாண மண்ணையும், மக்களையும் அவர்கள் உடைமைகளையும் மிகத் தாராளமாகப் பதம்பார்த்ததை இலகுவில் மறந்து விட இயலாது. எங்கேயும், எவ்வேளையிலும் எறிகணை திடீரென வந்து வீழ்ந்து பலரைக் கொல்லும் அல்லது காயமுற்றோர்கள் ஆக்கும், கட்டடங்கள் மற்றும் உடைமைகளை நாசமாக்கும் என்ற அச்சம் மக்களை வாட்டி வந்தது.

இப்போது அந்த அச்சம் நீங்கி மக்கள் ஓரளவிலேனும் நிம்மதியாக வாழ்கிறார்கள் ஆனால் அந்த நிம்மதியைக் குலைக்கும் எதிரிகளாக இப்போது மிதிவெடிகள் யாழ்ப்பாணப் பூமியில் புதையுண்டு கிடந்து பயமுறுத்துகின்றன.

எறிகணை — "செல்" — கூவிக் கொண்டு வரும்போதும் விழும் போதுமாவது கேட்கும் யானை வரும் பின்னரே மணி யோசை வரும் முன்னே — என்பது போல அதன் இரைச்சலும் அது உண்டாக்கும் அதிர்வும் வெளிப்படையாக உணரக் கூடியவை அங்கு இங்கு என்று ஓடியாவது பாதுகாப்புத் தேடலாம்.

யாழ்.மண்ணில் விதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், நிலக்கண்ணிகள் மக்களை மறைந்திருந்து கொல்லும் எதிரிகளாக மலிந்துள்ளன. குடாநாட்டு மக்களின் பிரதான உயிர்க் கொல்லியாக, அங்கவீனராக்கும் கருவிகளாக ஒளிந்து கிடக்கின்றன.

மக்களைக் கொன்று வரும், அங்கவீனராக்கும் மிதிவெடிகளை அகற்றுவதில் அரசு போதிய கவனம் செலுத்தவில்லை. மிதிவெடிகளை தமது படை அதிகாரிகளைக் கொண்டோ அல்லது வெளிநாட்டு நிபுணர்களை வருவித்தோ உயிர் காக்கும் பணியில் ஈடுபட அக்கறை கொள்ளவில்லை.

யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை தோன்றிவிட்டதாகக் காட்டுவதற்காக உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் செலுத்தப்பட்ட கவனமும் அக்கறையும், யாழ். மக்களை மிதிவெடி எதிரியிடம் இருந்து காப்பாற்றுவதற்குச்செலுத்தப்பட வில்லை.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி போன்ற பல இடங்கள் மரணப் பொறிப் பிரதேசங்களாகவே இன்னும் உள்ளன. குறிப்பிட்ட பாடசாலை விளையாட்டு மைதானத்தில், அங்கு மிதிவெடிகள் உண்டு என்று எச்சரிப்பதற்காக சிவப்புக் கொடிகள் நடப்பட்டுப் பாடசாலை இயங்குகிறது பந்து ஒன்று தற்செயலாக அங்கே போனால், எச்சரிக்கைக் கொடியை மறந்து மாணவன் அங்கே சென்றால் அவன் கதி என்ன?

இந்நிலையில்—

மிதிவெடிகளை அகற்றுவதற்கு உதவுவதாக முன்வந்த ஐ.நா. நிறுவனம் இன்னமும் செயலில் இறங்காமல் தாமதம் காட்டுவது கவலைக்குரியதாகும். யாழ். மண்ணில் புதைந்துள்ள பத்தாயிரம் மிதிவெடிகளை அகற்றும் பணி சிரமமானதே. எனினும் மனிதர்களை அங்கவீனர்களாக்கி அல்லது உயிர்களைக் காவு கொள்ளும் ஆபத்துத் தடுக்கப்படுவது அவசியம்.

## சத்தியப் பிரமாணம்

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். நகரைச் சேர்ந்த ஜே. 70 கிராம சேவையாளர் க. நித்தியானந்தன் சமாதான நீதிவானாகயாழ். நீதிவான் முன்னிலையில் இன்று சத்தியப்பிரமாணம் செய்து கொள்கிறார். (இ)

## விசேட பூஜை

யாழ்ப்பாணம், பெப் 2

சுன்னாகம் செல்லாச்சி அம்மையாரின் குருபூசைதினத்தை முன்னிட்டு நாளை செவ்வாய் காலை 9 மணிக்கு சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளன. (இ-7)

## அனுருத்த ராஜினாமா விவகாரம்:

# கடிதத்தை ஏற்பதா? இல்லையா? என்ற கேள்விக்கே இடமில்லை

### பிரபல சட்டத்தரணி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 2

"பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தனது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதைத் தொடர்ந்து அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு இணங்க அவர் அந்த அமைச்சர் பதவியை இழந்துள்ளார். எனவே அவரின் ராஜினாமாக் கடிதத்தை ஏற்பதா? அல்லது இல்லையா? என்ற கேள்வி எழவில்லை".

இப்படி பிரபல சட்டத்தரணி காமினி ஈரியகொல்ல தெரிவித்துள்ளார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கையொப்பத்தை இட்டு எழுத்து மூலமாக தனது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியும் தனது மருமகளுமான சந்திரிகா குமாரதுங்காவிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்பின் 47 ஆவது சரத்தின்படி பிரதமர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோர் எப்போது தமது ராஜினாமாவை எழுத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கிறார்களோ அந்த நேரத்தில் இருந்தே அவர்கள் பதவியை இழக்கிறார்கள்.

எனவே பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் ராஜினாமாக் கடிதம் ஜனாதிபதியிடம் கிடைத்த நேரத்திலிருந்து அனுருத்த ரத்வத்த பிரதி அமைச்சர் பதவியை இழந்துள்ளார். ராஜினாமாவை ஏற்பதா? அல்லது இல்லையா? என்ற பேச்சுக்கே இடமில்லை நாட்டின் பாதுகாப்புக் கருதி ஜெனரல் அனுருத்த ரத்வத்தையையே பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக வைத்திருக்க வேண்டும் என ஜனாதிபதி விரும்பினால் அவரை புதிதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கலாம்.

இப்படி சட்டத்தரணி காமினி ஈரியகொல்ல தெரிவித்துள்ளார்.

அதே சமயம், அனுருத்த ரத்வத்தவின் ராஜினாமாக் கடிதத்தை ஏற்க முடியாது என்று ஜனாதிபதி தெரிவித்திருப்பது தெரிந்ததே.

# தீவுப்பகுதி மக்களுக்கு சுயேச்சைக்குழு நன்றி

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் தீவுப்பகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்ட குழுவினர் தீவுப்பகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறை, வேலணைப் பிரதேச சபைகளுக்கு போட்டியிட்ட அக் குழுவின் சார்பில் முதன்மை வேட்பாளரான வ. குணசீலன் இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

எமக்கு வாக்களித்த, வாக்களிக்க வந்தபோது ஆயுததாரிகளால் திருப்பி அனுப்பப்பட்ட தீவக மக்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுத மிரட்டல்களுக்கு மத்தியிலும் எமக்கு வாக்களித்து மூன்று பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவாக காரணமாய் இருந்த தீவக மக்களுக்கு நாம் என்றும் கடமைப் பட்டுள்ளோம். முறைகேடான வாக்குப்பிரயோகமின்றி கண்ணியமான முறையில் எமக்கு வாக்களித்து எமது சேவை தொடர வாய்ப்பளித்த மக்களுக்கு எமது நன்றியைத் தெரியப்படுத்துகிறோம் — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# போட்டியிட்ட கட்சியினருக்கு பிரிகேடியர் தேநீர் விருந்து

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள், சுயேச்சைக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு யாழ். நகர கமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் கடந்த சனியன்று தேநீர் விருந்துபசாரம் அளித்தார்.

இத்தேர்தல் சிறப்புற இடம்பெற்றமைக்கு உதவிய அரச அதிகாரிகளுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

# சன சமூக நிலையம் மற்றும் பாலர் பாடசாலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 2

இருபாலை மடத்தடி கதிரொளி சன சமூக நிலையத் திறப்பு விழாவும் பாலர் பாடசாலைத் திறப்பு விழாவும் நேற்று நடைபெற்றன.

ஈ. பி. டி. பி. அமைப்பினரால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து புனரமைக்கப்பட்ட அந்த நிலையக் கட்டடத்தை டாக்டர் தியாகராசா சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

ஈ. பி. டி. பி. யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் வி. கே. ஜெகன் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்தார்.

ஈ. பி. டி. பி. பிரமுகர் கே. நிசாந்தன், அப்பகுதிக் கிராம சேவையாளர் உட்பட பலர் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இப்பகுதியில் நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண இரு கிணறுகளை அமைக்க 60 ஆயிரம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு ஒதுக்கீட்டில் இருந்து வழங்குவதாக வி.கே.ஜெகன் உறுதியளித்தார். (இ-3)

# புலிகள் பற்றிய நிலைப்பாடு அத்வானி மகிழ்ச்சி தெரிவிப்பு

சென்னை, பெப். 2

விடுதலைப் புலிகள் அமைப்பை விட்டு விலகி இருக்கப் போவதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கூறியிருப்பது தமக்கு மகிழ்ச்சி தருவதாக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தலில்பாரதீயஜனதாக் கட்சிக்கு மத்தியில் பெரும்பான்மை கிடைத்தாலும் அது கூட்டணிக் கட்சிகளுடன் ஆட்சியைப் பகிர்ந்து கொள்ளும் என்று அவர் தெரிவித்தார்.

பாரதிய ஜனதாவுக்கு 300-க்கு மேற்பட்ட ஆசனங்கள் கிடைக்கும் எனத் தாம் கணித்துள்ளதாகவும் அவர் கூறினார். [இ-7]

### நாளை

தை 21

செவ்வாய்கிழமை

திதி: ஸப்தமி

முன்இரவு 9.51 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

முன்இரவு 7.20 வரை.

சுபநேரம்: 11.05-12.35

ராகுகாலம்: 3.35-5.05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களப்பலி..

(முதலாம் பக்கத் தொடர்)

ணம்)

★ ஓர்வாணன் (வீரையா விக்கினேஸ்வரன் — வவுனியா)

★ இறையவன் (நடராசா சந்திரசேகரம் — யாழ்ப்பாணம்)

★ இறைகுமரன் அல்லது திவாகர் (சந்திரசேகரம் குலேந்திரன் — யாழ்ப்பாணம்)

★ மலர்ச்செல்வன் அல்லது விஜி (கந்தசாமி விஜிதரன் — அம்பாறை)

★ பெருமகன் (கோபால பிள்ளை இராஜேஸ்வரன் — மட்டக்களப்பு)

★ கலாவதியன் (கனகசிங்கம் குணசீலன் — மட்டக்களப்பு)

★ பாணசீலன் (சுப்பிரமணியம் புலிபகாந்தன் — அம்பாறை)

★ செந்தூரா (சரவணன் மல்லிகாதேவி — வவுனியா)

★ எஸ்தர் (இராஜரத்தினம் ஜெனித்தா — யாழ்ப்பாணம்)

★ கிளி (மகாராசா நிர்மலாதேவி — யாழ்ப்பாணம்)

★ பிறையாளன் (தியாகராசா தமிழ்ச்செல்வன் — வவுனியா)

★ ராம் அல்லது ரவீந்திரன (ஆறுமுகம் ராஜேந்திரன் — யாழ்ப்பாணம்)

★ சமவண்ணன் அல்லது ராம் (குலசிங்கம் குலநாயகம் — வவுனியா)

★ பகலவன் அல்லது செங்கதிர் (நாகராசா பாஸ்கரன் — யாழ்ப்பாணம்)

★ மணிமுடி (காளிக்குட்டி மணிரத்தினம் — திருமலை)

(இ-3)

## 350 புலிகள்...

(முதலாம் பக்கத்தொடர்)

அவ உதவி கோரியதாகவும் மேலதிக ஆள்பலம் கோரியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

படையினர் இதுவரை 187 விடுதலைப் புலிகளின் சடலங்களைக் கண்டெடுத்துள்ளனர் என்றும் —

ஏனைய சடலங்கள் துப்புரவுப் பணி பூர்த்தி அடைந்ததும் எடுக்கப்படும் என்றும் படை தரப்பினரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

57 புலிகளின் சடலங்களை புலிகள் எடுத்துச் சென்றதாக புலிகளின் வட்டாரங்கள் உறுதிப்படுத்தியதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-6-7-3]

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

மைச் செயலகம் நேற்று அறிவித்தது.

ஷெல் சத்தங்கள், குண்டு வீச்சுச் சத்தங்கள் மற்றும் பீரங்கிச் சத்தங்கள் நேற்று யாழ். நகரிலும் கேட்டன.

நேற்று அதிகாலை பரந்தன் பகுதியில் உள்ள இராணுவ முன்னணிக் காவலரண்களை ஊடறுத்துக் கொண்டு நுழைந்த புலிகள் இராணுவ முகாம்கள் பலவற்றை தாக்கி அழித்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

கிளிநொச்சிக்கு கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு பகுதிகளிலும் பரந்தனுக்கு கிழக்கிலுமே நேற்றைய தாக்குதல்கள் இடம்பெற்றன.

(இ-6-8-3)

# சுதந்திர பொன்விழாவை கண்டித்து லண்டனில் தமிழர்கள் பேரணி!

லண்டன், பெப். 2

இலங்கை சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்களைக் கண்டித்து 15ஆயிரத்துக்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் நேற்று லண்டனில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

நேற்றுக் காலை 11-15 இற்கு வாத்திய இசை முழங்க மார்பளாச் என்னும் இடத்தில் ஆரம்பமான இந்தப் பேரணி இலங்கை அரசின் செயற்பாடுகளுக்கு எதிராகக் கோஷம் எழுப்பிச் சென்றது.

பிரிட்டிஷ் மார்க்சிச கம்யூனிஸ்ட்கட்சி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழ் வழக்கறிஞர் சங்கம், மக்கள் காணாமற்போவதற்கு எதிரான சர்வதேச அமைப்பு உட்பட பல அமைப்புக்கள் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்தன.

பிரித்தானியாவின் வழிவகுப்பு -தமிழ் மண்ணில் ஆக்கிரமிப்பு', 'பிரிட்டனே! கடந்த 50 ஆண்டுகளாக எங்களை இலங்கையின் பிடியில் வைத்து விட்டாயே'', 'தமிழர் தேசம் தமிழீழம்' என்ற கோஷங்களை அவர்கள் எழுப்பிச் சென்றனர்.

ஆர்ப்பாட்டப் பேரணி முடிவில் றெபால்கல் சதுக்கத்தில் தமிழீழத் தேசிய கொடி ஏற்றப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டது.

அதன் பின்னர் பிரிட்டிஷ் பிரதமரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

(இ-3-7-6)

# முகாமை மூடும் முடிவுக்கு அகதிகள் கடும் எதிர்ப்பு

வவுனியா, பெப். 2

வவுனியா தமிழ் வித்தியாலயத்தில் உள்ள அகதி முகாமை மூட அரசாங்கம் எடுத்த முடிவை அந்த முகாமின் உள்ள மக்கள் எதிர்த்து வருகின்றனர்.

வவுனியா விமான நிலைய ஓடு பாதைக்கு அண்மையில் இந்த முகாம் அமைந்துள்ளதால் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த முகாமை மூடுவது தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இந்த முகாமில் 221 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 93 அகதிகள் உள்ளனர்.

(இ-3)

## வவுனியா அகதி முகாமில் 50 பேர் கைது!

வவுனியா, பெப். 2

வவுனியாவில் உள்ள அகதி முகாம்களைச்சோதனையிட்ட படையினர் 50க்கு மேற்பட்டவர்களைக் கைதுசெய்தனர்.

ஆசிகுளம். சிதம்பர புரம் அகதி முகாம்களிலேயே கடந்த வியாழன், வெள்ளி நாள்களில் இச்சோதனை இடம் பெற்றது.

கைதானவர்கள்தொடர்ந்து படையினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகத் தெரியவந்தது. [இ-3)

## அனுருத்த விவகாரம் சூடுபிடிப்பு: பிக்குகள் தீக்குளிப்பு பயமுறுத்து

கொழும்பு, பெப். 2

நேற்று நள்ளிரவுக்குள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தனது பதவி விலகல் கடிதத்தை மீளப் பெறாதுவிட்டால் இன்று முதல் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக பிக்குமார் அறிவித்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக 60 பிக்குகள் அறிவித்துள்ளனர்.

உண்ணாவிரதம் ஆரம்பித்து நான்கு நாள்களுக்குள் அவர் கடிதத்தை மீளப்பெறாதுவிட்டால் 3 பிக்குமார் தீக்குளிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்கள். (இ-3)

## தாக்குதலால் தொலைபேசி செயல் இழப்பு

வெளிஇடங்களில் இருந்து குடாநாட்டுக்கும் குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவைகள் நேற்று செயவிழந்தன.

ஆனையிறவுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ''ரிபீட்டர்'' கருவி சேதமடைந்ததே தொலைபேசி செயலிழக்கக் காரணம் எனக் கூறப்பட்டது.

குடாநாட்டுக்கான தொலைபேசிச் சேவை இந்த கருவி மூலமே மடுகந்தைக்கு அஞ்சல் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

'ரிபீட்டர்' கருவி சேதமடைந்ததன் காரணமாக குடாநாட்டுக்குள் மட்டும் தொலைபேசித் தொடர்புகளை பெறக்கூடியதாக இருந்தது. (இ-3)

## ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்)

துப்பாக்கிகளையும் தற்கொலைக் குண்டுதாரிகள் அணியும் 7 ஜக்கட்டுக்களையும் 2 கிரனேட்டுக்களையும் 12 சடலங்களையும் கைப்பற்றியதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பகலவன் களப்பலி என அறிவிப்பு

வவுனியா, பெப். 2

பரந்தன்-கிளிநொச்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதலில் விடுதலைப் புலிகளின் கலைஞர் பகலவன் களப்பலியானதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

அவர் சிறந்த திரைப்பட நடிகரும், பாடலாசிரியரும், பேச்சாளருமாவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மண்எண்ணெய் எடுத்துவர கட்டுப்பாடு

வவுனியா, பெப். 2

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு அனுப்பும் மண்எண்ணெய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாதமொன்றுக்கு 8 ஆயிரத்து 500 பீப்பாய் மண்எண்ணெய் தேவைப்படும் வன்னிக்கு 2 ஆயிரத்து 500 பீப்பாய் மண்எண்ணெய் மட்டுமே அனுப்பப்படுகிறது.

இதனால் வன்னியில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கிளிநொச்சி மேற்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

விக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும், மாத்தானில் தற்சமயம் வசித்தவருமான முத்தையா குணசீலன், முரசுமோட்டையைச் சேர்ந்த வ. முருகேசு (வயது 52) ஆகியோரும் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டுத் தாக்குதலில் நெல் வயல்களும் அழிந்துள்ளன.

(இ-3)


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் ஈசுர வருடம் தை மாதம் 25 ஆம் நாள் (07-02-98) சனிக்கிழமை பகல் 11-00 —12-00 மணிக்குள் வரும் மேஷ லக்கினத்தில் ஏகாதசி திதியும், மிருகசீரிட நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபவேளையில்

எமது கனிஷ்ட புதல்வன் **செல்வன் தேவ்நாத்** (ஸ்கால் வீதி, வெம்பிளி, லண்டன் HAO 4ST) அவர்களுக்கும்

எமது புத்திரி **செல்வி கவிதா** (200A, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்) அவர்களுக்கும்

கொழும்பு, கொள்ளுப்பிட்டி, 26 B, பல்மேரா வீதி (காலி வீதி) வானவில் திருமண மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத் திருமண வைபவத்தில் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிப்பதோடு, மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திருமதி ரமணி சதானந்தன் (காலஞ்சென்ற திரு. ச. சதானந்தன் போஸ் அவர்களின் பாரியார்) 84/4B, லொறிஸ் வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 4. Tel: 503510

திரு. ஆ. சண்முகநாதன் திருமதி மகேந்திராதேவி சண்முகநாதன் 41, டிவொஸ் ஒழுங்கை, பம்பலப்பிட்டி, கொழும்பு - 4. Tel: 074 510581

(52699) [இரு வீட்டார் அழைப்பு]



★ கொழும்பு விலைக்கே யாழ்ப்பாணத்தில் வாங்கலாம்!

அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

## லீலா கலண்டர்கள், டயறிகள்

வாருங்கள்! உதயன் விளம்பர கரும பீடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-02-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org